




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புதுடெல்லி அண்ணா கலைஞர் அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக துணைப் பொதுச்செயலாளரும் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவருமான திருச்சி சிவா தலைமையில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

### யோகேஸ்வரி மணிமாறன் தலைமை!

# மயிலம் ஒன்றியம் பெரியதச்சூரில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

மைலம், ஆக. 9 -

விழுப்புரம் மாவட்டம் மைலம் ஊராட்சி ஒன்றியம் பெரியதச்சூர் ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மைலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார். விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் தணிகை ரெத்தினமாலா முன்னிலை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப் பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

முகாமில் பெரியதச்சூர், வி.நல்லாளம், பேரணி, சே. கொத்தமங்கலம், செண்டியம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதியோர் ஓய்வூதியம், பட்டா மாற்றம், குடும்ப அட்டை கேட்டு கோரிக்கை மனு வழங்கினர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாநிலத் தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன், மயிலம் மத்திய ஒன்றிய செயலாளர் செழியன், ஒன்றிய கவுன்சிலர்கள் அஞ்சலாட்சி, துரைச்செல்வம், ஊராட்சி மன்ற தலைவர்கள் கணேசன், கிருஷ்ணமூர்த்தி, சேகர், மலர்க்கொடி, புனிதா, மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் அன்சாரி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் கேனிப்பட்டடு செந்தில்குமார் உள்ளிட்ட ஒன்றிய கவுன்சிலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் சார்பில்

# புதுக்கோட்டையில் கல்வி உரிமை மீட்பு கருத்தரங்கம்!

## அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டை, ஆக.9 -

புதுக்கோட்டையில் தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் கல்வி உரிமை மீட்பு கருத்தரங்கம் இன்று (9.8.2025 - சனிக்கிழமை) மஹராஜ் மஹாலில் நடைபெறுகிறது.

கருத்தரங்கில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கருத்தரங்கப் பேருரை ஆற்றுகிறார்.

இயற்கை வளங்கள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நலத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கருத்தரங்க சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இது குறித்து தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் முத்தமிழஅறிஞர் கலைஞர் அவர்களால் 5.8.1973 அன்று திருவண்ணாமலையில் பாவலர் க.மீனாட்சி சுந்தரம் முயற்சியால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த அமைப்பானது 50 ஆண்டுகளாக ஆசிரியர் நலன், மாணவர்நலன், சமுதாய நலனுக்காக குரல் கொடுக்கக்கூடிய அமைப்பாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

ஐயா பாவலரின் மறைவிற்குப் பிறகு கலைஞர் அவர்களால் “மன்றம்” என்கிற உயரிய விருதுபெற்ற மன்றம் நா. சண்முகநாதன் தலைமையேற்று அவர் காட்டிய பாதையில் தடம் மாறாமல் பயணித்துக் கொண்டிருக்கிறது.

கலைஞர் அவர்கள் தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில மாநாட்டில் தான் முதன் முதலில் ஆசிரியர் அரசு ஊழியர் இறந்தால் குடும்பப் பாதுகாப்பு நிதி பத்தாயிரம் வழங்கப்படும் என அறிவித்து சிறப்பு செய்தார். அதே போல் ஒவ்வொரு மாநில மாநாட்டிலும் பல்வேறு சலுகைகளை அறிவித்து இந்த இயக்கத்திற்கு பெருமை சேர்த்தவர் கலைஞர்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் எடுக்கும் கல்வி வளர்ச்சி பற்றிய அனைத்து நிகழ்வுகளுக்கும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் உறுதுணையாக இருந்து செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் புதுக்கோட்டையில் வேறு எந்த ஆசிரியர் இயக்கமும் முன்னெடுக்காத கல்வி உரிமை மீட்பு கருத்தரங்கத்தை சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி நேமந்தபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடந்த “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் 3 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு தலா ரூ. 50,000 வங்கி கடன் உதவிகளை மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.







விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஒன்றியம் பெரியதச்சூர் ஊராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் முகாமில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரபெற்ற கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றியச் செயலாளர்கள் மணிமாறன், செழியன், மாவட்ட ஊராட்சி உதவி இயக்குனர் தணிகை ரெத்தினமாலா, வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# கலைஞர்... கலைஞர்...!

அகத்தில்
காயங்களிருந்தாலும்
புறத்திற்கு மார்பு காட்டும் பொழுதுகள்
நிறைந்தது உன் வாழ்க்கை.

பதினெட்டு வயதில்
தமிழ் மாணவர் மன்ற
சொற்பொழிவாளருக்கு
வழிச்செலவு தர
வளையம் ஒடிந்த தங்கச்சங்கிலியை
அன்னைக்கும் தெரியாமல்
அடகு வைத்தாய்.

மாணவர் மன்ற பொதுக்கூட்டத்திற்கு
பேச வந்தவரின்
போக்குவரத்துச் செலவை
மனைவியின்
சந்தனக்கிண்ணம் விற்று
சமாளித்தாய்.

தந்தை
உயிர் காக்க
ஓடிச் செல்கிறாய்
மருத்துவரை அழைத்துவர.

மருத்துவரோ
மாநாடு நடத்திக்கொண்டிருக்கிறார்.

பெரிய பேச்சாளன்
நீ
விடுவாரா உன்னை.
உன் மனத்துயரை
அறியாமல்
பேச அழைக்கிறார்.

பேசிக்கொண்டிருக்கையில்
தாளில்
இடி வந்து இறங்குகிறது
தந்தை
இறந்தாரென.



முரசொலி
வாரப் பத்திரிகையாக
மாறுவதற்கு நிதியில்லை.

என்ன செய்ய?

மனைவியின்
தாலிச் சங்கிலியை
விற்று
வாரப் பத்திரிகையை
வரவு வைத்தாய்

காதல் மனைவி
சாகக் கிடக்க
புதுக்கோட்டை கழகக் கூட்டத்திற்கு
போய் வந்தாய்.

மனைவியின்
வாழ்க்கை முடிந்திருந்தது.

இன்னொரு திருமணம்
நடக்கும் நாளில்
இந்தியை எதிர்த்து
மறியல் செய்தாய்,

உன் திருமணத்திற்கு
தலைமை தாங்க
அண்ணா வரவில்லை.

அண்ணாவுக்கு
அடுத்து நீதானே.

உனது திருமணத்திற்கு
நீயே
தலைமை தாங்கிக்கொண்டாய்.

ஸ்டான்லி
மருத்துவ மனையில்
அன்னைக்கு
அறுவைச் சிகிச்சை
காலையில்.

கழகம் காக்க
தீப்பொறி தெறிக்க
ராயபுரத்தில் முழங்கினாய்
அன்றைய மாலையில்.

கடைசிக்கும்
கடைசியாய்
உடலை
ராஜாஜி ஹாலில்
கிடத்திவிட்டு

வாதாடச் சென்றாய்
உயர் நீதிமன்றத்துக்கு.

உன் வாழ்க்கையின்
ஒவ்வொரு கணத்தையும்
இது
அகமா
புறமா
என
எளிதில் பிரிக்கமுடியாது.



**வி.உ. இளவேனில்**
கலை இலக்கிய மன்றம்
கொளத்தூர்

### வேலூர் மாவட்ட மக்களின் கனவு நனவாக

# விமான நிலைய கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடுவீர்!

## ஒன்றிய அமைச்சரிடம் — டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக.9-

வேலூர் மாவட்டத்தில் உள்ள லட்சக்கணக்கான மக்களின் கனவு நனவாகும் வகையில், வேலூரில் அமைக்கப்பட்டு வரும் விமான நிலைய கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றிய சிவில் விமானத்துறை அமைச்சருக்கு வேலூர் தொகுதி மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கடிதம் எழுதியுள்ளார்.

அவரது கடிதம் வருமாறு:-

வேலூர் மக்களவைத் தொகுதியின் பிரதிநிதியாக மக்களின் நம்பிக்கை கவலை மற்றும் ஒப்பிட முடியாத எதிர்பார்ப்பின் எதிரொலிப்பைத் தாங்கி இக்கடிதத்தை நான் உங்களுக்கு எழுதுகிறேன். எங்களது நீண்டநாள் எதிர்பார்ப்பாக விளங்கி வரும் விமான நிலைய சேவை என்பது எங்கள் பகுதிக்கு தடையற்ற போக்குவரத்து அபரிமிதமான பொருளாதார வளர்ச்சி உள்ளிட்டவற்றிற்கு வழிவகுத்து கல்வி வர்த்தக மற்றும் பண்பாட்டு முனையமாக வேலூரை மாற்றிட இந்த விமான நிலையம் உதவும் என்றால் அது மிகையாகாது. இது போன்ற இன்றியமையாத திட்டத்தில் பல்வேறு கால கட்டங்களில் தாமதங்கள் ஏற்பட்டு வருவது மக்களிடம் ஒருவித அதிருப்தியை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாகவே உங்களது நிர்வாகத்தின் மூலம் போர்க்கால அடிப்படையில் தீர்வு காணவேண்டி கேட்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வேலூர் மக்களுக்கு இது வெறும் உட்கட்டமைப்பு ரீதியான தேவை அல்ல. இந்திய அளவில் வேலூரை உயர்த்திப்பிடிக்கும் வளர்ச்சிக்கு அடிகோலுவதாகவே கருதப்படுகிறது. வரலாற்று ரீதியாக பல்வேறு பண்பாட்டு அடையாளங்களை தாங்கி நிற்கும் வேலூரில் சுற்றுலா அதிகரித்து எண்ணிலடங்கா தொழில் வாய்ப்புகள் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாகி மாணவர்கள் தொழில் முனைவோர் என பல குடும்பங்களுக்கு இந்த விமான சேவை பயனளிக்கும் வகையில் அமைந்திடும். ஒவ்வொரு மாதம் கடக்கையிலும் தொடரும் இந்த தொய்வு எனது தொகுதி மக்களின் கனவை அதிருப்தியை ஏற்படுத்துகிறது.

இந்த திட்டத்தை கொண்டு வந்ததில் ஒன்றிய அமைச்சகத்தின் செயல்பாடு பாராட்டத்தக்கதாக இருந்தாலும் பல்வேறு முக்கிய பணிகள் முடிவடையாமல் இருப்பது தான் விமான நிலையம் துவக்கப்படாமல் இருப்பதற்கு காரணம். எனவே போர்க்கால அடிப்படையில் கட்டுமானம் உள்ளிட்ட பல்வேறு பணிகளை துரிதப்படுத்தி விரைவில் சேவைகளை துவக்க தயார் நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்று நான் அழுத்தமாக வலியுறுத்துகிறேன். சரியான காலவறையை விளக்கி இவ் விமான நிலைய துவக்க நாளை இறுதி செய்திட வேண்டும். இது எங்கள் மக்களின் நம்பிக்கையை மட்டுமல்ல வரலாற்று சிறப்பு மிக்க இந்த திட்டத்திற்கு ஒருங்கிணைந்த ஆதரவை நல்கிட உதவும்.

எங்களது முதன்மையான கவலையே சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பு வசதிகளை விமான சேவைக்கான தரநிலைக்கு கொண்டு வருவதை நோக்கி உள்ளது. ரூ. 8 கோடியே 22 இலட்சத்து 86 ஆயிரத்து 400 ரூபாய் மதிப்பீட்டில் மழைக்காலத்தை கருத்தில் கொண்டு 12 மாத காலக்கட்டத்தில் முடிக்கப்படவேண்டியது இப்பணியின் தற்போதைய நிலை கேள்விக்குரியதாக உள்ளது. உட்கட்டமைப்பு நிதி ஒதுக்கீடு அல்லது சுற்றுச்சூழல் சார்ந்த ஏதேனும் அம்சங்களில் செயல்பட்டு ரீதியாக தாமதங்கள் ஏற்படுகிறதா? 12 மாத காலகட்டத்தில் உறுதியாக இப்பணிகளை முடிக்கப்படுவதை உறுதி செய்திட என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது? இதுபோன்ற கேள்விகளுக்கு முறையான தரவுகளோடு எனது தொகுதி மக்களுக்கு விளக்கமளிக்கவேண்டும்.

**துரித நடவடிக்கை!**

வேலூர் விமான நிலைய பணிகளின் ஒட்டுமொத்த நிலை குறித்த வெளிப்படையான விளக்கம் அளிக்க வேண்டும். இது மட்டுமல்லாமல் நிலம் கையகப் படுத்துதல் தொழில்நுட்ப ரீதியான அனுமதி ஒப்பந்த தாரர் மேலாண்மை உள்ளிட்டவற்றில் ஏதேனும் சிரமங்களை சந்திக்க நேர்கிறதா? அப்படியாயின் அது சார்ந்த முறையான விளக்கத்தை வெளியிட வேண்டும். இதன் மூலமாக மட்டுமே உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் விரைவில் முடிக்கப்படும். ஒன்றிய அமைச்சகத்தின் துரிதமான நடவடிக்கையின் மூலம் எனது வேலூர் தொகுதி மக்களின் எதிர்பார்ப்பு காப்பாற்றப்பட வேண்டும்.

அனைவருக்கும் விமான சேவை சென்றடைய வேண்டும் என்ற ஒன்றிய அரசின் இலக்கை செயல்படுத்த உதயன் திட்டம் கொண்டுவருவதைப்போல வேலூர் விமான நிலையமும் இவ்விலக்கை சாதிக்க உதவிகரமாக அமைந்திடும். இரண்டாம் நிலை நகரங்களான வேலூர் போன்ற பகுதிகளும் விமான சேவை பெறுவதன் மூலம் புதிய இந்தியாவை உருவாக்கும் இலட்சியத்திற்கு வலு சேர்க்க இயலும். எங்கள் பகுதி மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கு தொழில்முனைவோர் பல்வேறு வர்த்தக சந்தைகளை சென்றடைய மக்கள் தங்கள் குடும்பங்களை எல்லை மறந்து சந்தித்து ஒன்றிணைய என பல்வேறு நிலைகளில் பல வகையிலான எதிர்பார்ப்புகளை இத்திட்டம் நிறைவேற்றிடும் என்பது தெள்ளத்தெளிவாக புலப்படும். ஆனால் இந்த எதிர்பார்ப்பு மேலும் பல தாமதங்களால் தடைபட்டுவிடக்கூடாது.

**சரியான காலவரையறை!**

வேலூர் மக்களின் பிரதிநிதியாக இத்திட்டத்தை செயல்படுத்த அனைத்து வகையிலும் ஒத்துழைக்க நாங்கள் தயாராக உள்ளோம். மேலும் துரிதமாக இத்திட்டத்தை செயல்படுத்த உள்ளூர் அளவில் ஒருங்கிணைப்பு சார்ந்த தேவைகள் இருந்தால் அதற்கும் உதவிட தயாராக உள்ளேன். மீதமுள்ள கட்டுமான பணிகள் ஒட்டு மொத்த திட்ட செயல்பாட்டிற்கான சரியான கால வரையறை மற்றும் விமான நிலைய துவக்க நாள் உள்ளிட்டவை பற்றிய முறையான விளக்கத்தை அளிக்கவேண்டும். கூடுதலாக தமிழ்நாட்டின் பொருளாதார தன்னிறைவு பெறும் நிலையை தமிழ்நாடு மற்றும் இந்திய அளவில் உருவாக்கிட எந்த வகையில் இவ்விமான நிலையம் பெருமைமிகு உந்துசக்தியாக இருக்கும் என்பதை பற்றிய தரவுகளையும் ஆய்வு செய்து அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உங்களது ஒருங்கிணைந்த முயற்சியின் மூலம் வேலூர் விமான நிலைய பணிகள் முடுக்கிவிடப்பட்டு இலட்சக்கணக்கான மக்களின் கனவு நனவாக வேண்டும். மேலும் அது சார்ந்த உதவிகள் தேவைப்பட்டால் உறுதுணையாக களப்பணி ஆற்றிட நாங்கள் துணை நிற்போம்!

இவ்வாறு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

### திருவொற்றியூர் 3வது வட்டச் செயலாளர்

# எம்.மாணிக்கவேலன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 9–

திருவொற்றியூர் மேற்குப் பகுதி 3வது வட்டக் கழகச் செயலாளர் எம்.மாணிக்கவேலன் (வயது 51) நேற்று அதிகாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு மனைவி எம்.வடிவுக்கரசி மற்றும் இரு மகள்கள் உள்ளனர்.

மறைவுச் செய்தி அறிந்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அதில் **சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 3ஆவது வட்டக் கழகச் செயலாளர் திரு. எம். மாணிக்கவேலன் அவர்களது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் கழக உடன்பிறப்புகளுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்** என்று தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.